செய்தி வெளியீடு எண்: 289 நாள் : 15.06.2016

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி நீலோபர் கபீல் அவர்கள் 14.06.2016 அன்று மாலை 3.00 மணியளவில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககத்தில் ஆய்வு கூட்டம் மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் இத்துறையின்கீழ் செயல்படும் வேலைவாய்ப்பு பிரிவு மற்றும் பயிற்சி பிரிவின் செயல்பாடுகள், மற்றும் திட்டங்கள் குறித்து ஆய்வினை மேற்கொண்டார்கள்.

இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெற்று வேலைக்கான திறனைப் பெற்று தகுதியான வேலைவாய்ப்பினை பெற வேண்டும் என்பதும் இதன் மூலம் அவர்களது பொருளாதார சமூக நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசின் உயரிய நோக்கமாகும். இதன்படி துறையின் கீழ் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள், சீருடைகள், மடிக்கணினிகள், மிதிவண்டிகள் பற்றிய விவரங்களும் துறையின் செயல்பாடுகள் மற்றும் கடந்த 5 ஆண்டுகளில் அரசால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் செயல்படுத்தப்பட்ட / நிறைவேற்றப்பட்ட விவரம் குறித்தும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி நீலோபர் கபீல் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 82.94 இலட்சம் மனுதாரர்கள் அரசு வேலைவேண்டி பதிவு செய்துள்ளனர். இதில் உத்தேசமாக 45 இலட்சம் மனுதாரர்கள் கடந்த 2011–ம் ஆண்டு முதல் 10–ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்பு பயின்ற மாணவர்கள். அவர்கள் தங்கள் கல்வித் தகுதியினைத் தாங்கள் பயின்ற பள்ளிகளிலேயே ஆன்லைன் மூலம் பதிவு செய்யும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இம்மனுதாரர்கள் தங்களின் உயர்கல்வியினை தொடர்ந்து கொண்டிருப்பவர்களாக கருதப்படுவார்கள். கடந்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு அரசுத் துறையில் 77,271 நபர்களும், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 1,22,931 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது பெரும்பாலான பணியிடங்கள் போட்டித் தேர்வுகள் மூலம் நிரப்பப்படுவதால் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தன்னார்வப் பயிலும் வட்டங்கள் மூலம் போட்டித்தேர்வுகளில் கலந்துகொள்வதற்கு இலவச பயிற்சி வகுப்புகள் அளிக்கப்படுகிறது. வேலைவாய்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் 5.82 இலட்சம் பதிவுதாரர்கள் 171.14 கோடி ரூபாய் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையாக பெற்றுள்ளனர். கடந்த 5 ஆண்டுகளில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு 20 சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், 1 மண்டல இணை இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு சேர்த்து மொத்தம் ரூ.30.80 கோடி ரூபாய் அரசால் அளிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 15 அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வேலைவாய்ப்புத் துறையின் முக்கிய பணிகளான பதிவு செய்தல், பதிவு புதுப்பித்தல், பரிந்துரைத்தல், தொழில்நெறி வழிகாட்டல், வேலைநிலவரத் தகவல், வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம் ஆகிய அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு ஆன்லைன் மூலமாக இத்துறையின் இணையதளமான www.tnvelaivaaippu.gov.in மேற்கொள்ளப்படுவதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி நீலோபர் கபீல் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அதனால் பயனடைந்தோர் விவரங்கள் குறித்தும் இக்கழகத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956–ன்படி 1978–ம் ஆண்டில் ரூ.15 இலட்சம் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 31.03.2016 முடிய 8,777 மனுதாரர்களை மொத்தம் 34 நாடுகளில் பல்வேறு துறைகளில் பணியமர்த்தம் செய்துள்ளது. கடந்த வருடத்தில் மட்டும் (2015–2016) 308 மனுதாரர்களை பணியமர்த்தம் செய்துள்ளது. இந்நிறுவனத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி 20,773 மனுதாரர்கள் பதிவுசெய்துள்ளனர்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மை செயலாளர் திரு குமார் ஜெயந்த், இ.ஆ.ப., தொழிலாளர் துறை ஆணையர் திருமதி பி.அமுதா, இ.ஆ.ப., மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் திரு சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**